ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 11.10.2019 |

**நாணயக் கொள்கை மீளாய்வு: இல.6 - 2019**

**இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் மாற்றமின்றியிருக்கும்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2019 ஒத்தோபர் 10ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.00 சதவீதத்திலும் 8.00 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது. சபையானது உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் நிதியியல் சந்தைகளிலும் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரத்திலும் தற்பொழுது காணப்படுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளை மிகக் கவனமாக பகுப்பாய்வு செய்தமையினைத் தொடர்ந்து இத்தீர்மானத்திற்கு வந்திருக்கிறது. நாணயச் சபையின் தீர்மானமானது பணவீக்கத்தினை விரும்பத்தக்க 4-6 சதவீத வீச்சில் பேணுவதனுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்ட வேளையில் பொருளாதார வளர்ச்சி நடுத்தர காலப்பகுதியில் அதன் உள்ளாற்றலை எய்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் காணப்பட்டது.

**பல பொருளாதாரங்களின் நாணயக் கொள்கை நிலை அதிகளவில் தளர்த்தப்பட்டிருக்கின்றது**

முக்கியமாக, நலிவடைந்த கேள்வி மற்றும் தாழ்வான பண்ட விலைகளுடன் உலகளாவிய பணவீக்க தோற்றப்பாடு தொடர்ந்து மிதமாகக் காணப்பட்ட அதேவேளை, வர்த்தக பதற்றங்கள் மற்றும் பூகோள அரசியல் தொடர்பான நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக உலகளாவிய பொருளாதார தோற்றப்பாடு தொடர்ந்து தேய்வடைந்தது. நலிவடைந்த உலகளாவிய வளர்ச்சியின் உத்வேகம் மற்றும் தளர்வுற்ற பணவீக்க அசைவுகள் பல முன்னேற்றங்கண்ட அதேபோன்று தோற்றம் பெற்றுவரும் சந்தை பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் அதிகளவிலான தளர்த்தலைக் கொண்டிருக்க வழியமைத்தது.

**பொருளாதார வளர்ச்சி படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற தற்காலிக மதிப்பீடுகளின்படி, உண்மை நியதிகளில் இலங்கையின் பொருளாதாரம் 2019இன் முதலாம் காலாண்டில் 3.7 சதவீத வளர்ச்சியை பதிவு செய்ததைத் தொடர்ந்து, 2019இன் இரண்டாம் காலாண்டு பகுதியில் 1.6

சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்திருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் கடுமையாக தாக்கமடைந்த பணிகளுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளின் செயலாற்றத்தில் ஒரு கவனிக்கத்தக்க மெதுவடைவு அவதானிக்கப்பட்டது. விவசாயம் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் 2019இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் அதன் முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் மந்தமாக வளர்ச்சியடைந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப, 2019இல் பொருளாதார வளர்ச்சி மிதமாக தொடர்வதுடன் நடுத்தர காலத்தில் ஓர் படிப்படியான மீட்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

**தற்காலிக நிரம்பல் பக்க அழுத்தங்கள் இருப்பினும், பணவீக்கம் விரும்பத்தக்க மட்டங்களில் தொடரும்**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கம் உள்நாட்டு உணவு நிரம்பல்களின் அதிகரித்த விலைகளால் உந்தப்பட்டு 2019 செத்தெம்பரில் விரைவடைந்தது. உணவு பண்டங்களுக்கு பெருமளவு நிறையைக் கொண்டுள்ள தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் செத்தெம்பரில் விரைவடையும் சாத்தியம் கொண்டுள்ளது. உணவுப் பணவீக்கம் 2019இன் எஞ்சிய காலப்பகுதியில் முதன்மை பணவீக்கத்தை ஓரளவாக அதிகரித்துக் காணப்படச்செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய தற்காலிக நிரம்பல்பக்க விலை அழுத்தங்களின் மெதுவடைதலுடன் பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் சிறந்த முறையில் நிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு பணவீக்கம் விரும்பத்தக்க 4 - 6 சதவீத வீச்சினுள் நிலைபெறும் என எறிவு செய்யப்படுகின்றது. மிதமான கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் மையப் பணவீக்கம் முக்கியமாக 2019இன் ஆரம்பத்தில் வீட்டு வாடகைகளில் ஓர் பாரிய சீராக்கத்தினால் ஏற்பட்ட தாக்கத்தின் மறைவுடன் 2020 சனவரி முதல் குறைந்த மட்டங்களுக்கு மீளச்செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்க்கணியமான உலகளாவிய அபிவிருத்திகளுக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறை தொடர்ந்து மீளெழுந்தன்மையுடன் காணப்படுகின்றது**

இறக்குமதிகளின் வளர்ச்சியில் ஓர் குறிப்பிடத்தக்க சுருக்கம் மற்றும் ஏற்றுமதிகளின் மிதமான வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்ட வர்த்தகச் செயலாற்றம் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஒரு மேம்பாட்டை பதிவுசெய்திருந்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் மிதமடைந்த அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தாக்கத்திலிருந்து சுற்றுலா பயணிகளின் வருகைகள் படிப்படியாக மீட்சியடைந்தும் தொடர்ச்சியாக மேம்பட்டன. முதலாந்தர மற்றும் இரண்டாம்தர சந்தை நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளும் போது ஆண்டின் இதுவரை காலப்பகுதியில் பங்கு சந்தைகள் ஒரு மிதமான தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்திருந்த அதேவேளை வெளிநாட்டு அரச பிணையச் சந்தைகள் மீதான முதலீடுகளில் 2019 ஓகத்தில் காணப்பட்ட வெளிப்பாய்ச்சல்கள் பின்னர் முற்றுப்பெற்றன. சாதகமற்ற சந்தை ஊகத்தினால் பகுதியளவில் செத்தெம்பரில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்த போதிலும் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களுடன் ஒத்தோபரில் இந்தப் போக்கு எதிர்ப்புறமானது. ஆண்டின் இதுவரை காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 1.3 சதவீதத்தால் உயர்வடைந்து காணப்பட்ட அதேவேளை, 2019 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 4.5 மாதங்களுக்கான இறக்குமதி காப்பினை வழங்குகிறது.

**நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்கள் தொடர்ந்தும் மிதமடைந்தன**

மிதமான பொருளாதார நடவடிக்கைகள், நலிவடைந்த முதலீட்டாளர் மனோபாவங்கள் மற்றும் உயர்வடைந்த வழங்கல் வீதங்கள் என்பனவற்றிக்கு மத்தியில் 2019 ஓகத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி தொடர்ச்சியாக மெதுவடைந்தது. முழுமை நியதிகளில் 2019 ஓகத்து மாதகாலப்பகுதியில் அதேபோன்று 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில், தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரிவடைந்த போதிலும், இவ்விரிவு 2018இன் தொடர்புபட்ட காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மட்டத்தை விட மிகக் குறைவாக இருந்தது. தனியார் துறை கொடுகடன் வளர்ச்சியின் மெதுவடைதலினால் உந்தப்பட்டு விரிந்த பணத்தின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியும் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மெதுவடைந்திருந்தது. சந்தை வழங்கல் வீதங்களின் தொடர்கின்ற குறைப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கையின் எதிர்பார்க்கப்படும் மீளெழுச்சி என்பனவற்றைக் கருத்திற்கொள்ளும்போது கொடுகடன் விரிவாக்கம், எதிர்வரும் காலப்பகுதியிலும் படிப்படியாக விரைவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது மேலும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும்.

**ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் வழங்கல் வீதங்களில் விரைவான குறைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது**

நாணயக்கொள்கை மற்றும் நாணய நிலைமைகளை தளர்த்துவதற்கு கடந்த பன்னிரண்டு மாதங்களில், மத்திய வங்கி பல்வேறுபட்ட கொள்கை, நடவடிக்கைகள் அதேபோன்று ஒழுங்குமுறை வழிமுறைகள் என்பவற்றை மேற்கொண்டிருந்தது. 2019 ஏப்பிறலில் நிதியியல் நிறுவனங்களின் வைப்பு வீதங்கள் மீதான அதிஉச்ச மட்ட எல்லைகள் விதிக்கப்பட்டதுடன் வைப்பு வட்டி வீதங்கள் கணிசமான அளவினால் வீழ்ச்சியடைந்தன. சந்தை கடன்வழங்கல் வீதங்களின் விரைவான வீழ்ச்சியை ஏற்படுத்துவதற்கு தூண்டும் நோக்கிலும் சந்தை கடன்வழங்கல் வீதங்களுக்கு அண்மைக்கால கொள்கை வழிமுறைகளின் ஊடுகடத்தலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் மத்திய வங்கி கடன்வழங்கல் வீதங்கள் மீது அதிஉச்ச எல்லைகளை பிரயோகித்திருந்த அதேவேளை, 2019 செத்தெம்பரில் உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பு வீதங்கள் மீதான அதிஉச்ச எல்லைகளை விலக்கியிருந்தது. 2020 மார்ச்சுக்குள் மீளாய்வு செய்யப்படவுள்ள இத்தகைய ஒழுங்கு வழிமுறைகள் என்பனவற்றுடன் குறைக்கப்பட்ட கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் என்பன கொடுகடன் வட்டி வீதங்களில் கணிசமான மற்றும் விரைவான குறைப்பிற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது முன்னோக்கிச் செல்கையில் கொடுகடனுக்கான கேள்வியை மேம்படுத்தும்.

**கொள்கை வட்டி வீதங்கள் அதன் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

பொருளாதார மற்றும் நிதியியல் சந்தைகளின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நிலைமைகளை கருத்திற்கொண்டு நாணயச்சபை 2019 ஒத்தோபர் 10ஆம் நாளன்று இடம்பெற்ற அதனது கூட்டத்தில், கடந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியில், மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் நிதியியல் துறையினூடாக அவற்றின் ஊடுகடத்தலுக்குப் போதுமான நேரம் தரப்பட்ட நிலையில் விரும்பத்தக்க பெறுபேறுகளை எய்தச்செய்யும். இதற்கேற்ப, நாணயச்சபை, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பனவற்றை அதன் தற்போதைய மட்டங்களில் முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.00 சதவீதமாகப் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

**நாணயக்கொள்கை தீர்மானம்: கொள்கை வட்டிவீதங்கள், நியதி ஒதுக்கு வீதம் மாற்றமன்றி இருந்தன.**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 5.00% |


**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடனான பத்திரிகை மாநாடு 2019 ஒத்தோபர் 11ஆம் நாளன்று மு.ப 11.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக்கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2019 நவெம்பர் 29ஆம் நாளன்று வெளியிடப்படும்.

**வரைபடம் 1**

**நாணயக்கொள்கை மற்றும் நாணய நிலைமைகளை தளர்த்துவதற்கு எடுக்கப்பட்ட அண்மைக்கால வழிமுறைகள்**



## தரவு இணைப்புக்கள்:

### அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | | 2018 | | | | | 2019 | |
| | 2ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு |
| வேளாண்மை | -2.6 | **-0.4** | 5.1 | 5.6 | 4.0 | 4.5 | **4.8** | 5.5 | 1.0 |
| கைத்தொழில் | 4.7 | **4.1** | 1.7 | 2.8 | 3.1 | -3.6 | **0.9** | 3.0 | 1.4 |
| பணிகள் | 3.9 | **3.6** | 5.5 | 4.8 | 4.3 | 4.3 | **4.7** | 4.1 | 1.6 |
| மொ.உ.உற்பத்தி | **3.6** | **3.4** | **4.0** | **3.9** | **3.5** | **1.8** | **3.2** | **3.7** | **1.6** |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | திசெ 18 | மாச்சு 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 | ஓகத் 19 | செத் 19 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 2.8 | 4.3 | 4.5 | 5.0 | 3.8 | 3.3 | 3.4 | 5.0 |
| | தேநுவிசு(2013=100) | 0.4 | 2.9 | 3.6 | 3.5 | 2.1 | 2.2 | 3.4 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.1 | 5.6 | 5.5 | 6.2 | 5.8 | 5.7 | 5.6 | 5.6 |
| | தேநுவிசு(2013=100) | 3.1 | 5.8 | 6.3 | 6.3 | 6.1 | 6.1 | 5.9 | - |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 | ஓகத் 19 | ஏப் 19 | மே 19 | யூன் 19 | யூலை 19 | ஓகத் 19 |
| ஒதுக்குப் பணம் | 924 | 849 | 875 | 888 | 913 | (7.6) | (12.7) | (12.4) | (11.3) | (9.1) |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 7,295 | 7,295 | 7,338 | 7,355 | 7,397 | 9.0 | 9.4 | 8.7 | 8.2 | 7.7 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 110 | 103 | 99 | 105 | 102 | (7.6) | 38.3 | (2.2) | (39.0) | (39.0) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,185 | 7,192 | 7,239 | 7,251 | 7,295 | 9.3 | 9.0 | 8.9 | 9.5 | 8.9 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,584 | 2,594 | 2,667 | 2,703 | 2,751 | 11.3 | 11.6 | 17.3 | 21.4 | 21.1 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 726 | 726 | 730 | 729 | 747 | 24.9 | 19.4 | 17.9 | 14.6 | 16.8 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,544 | 5,542 | 5,605 | 5,604 | 5,626 | 9.9 | 9.2 | 8.7 | 7.7 | 7.2 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,968 | 8,980 | 9,051 | 9,082 | 9,133 | 9.1 | 9.4 | 9.2 | 9.0 | 8.7 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மாச் 19 முடிவில் | ஏப் 19 முடிவில் | மே 19 முடிவில் | யூன் 19 முடிவில் | யூலை 19 முடிவில் | ஓகத்து 19 முடிவில் | செத் 19 முடிவில் | 2019 ஒத்தோபர் 10 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.00 | 8.00 | 7.50 | 7.50 | 7.50 | 7.00 | 7.00 | 7.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.00 | 9.00 | 8.50 | 8.50 | 8.50 | 8.00 | 8.00 | 8.00 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.51 | 8.49 | 7.94 | 7.86 | 7.70 | 7.43 | 7.45 | 7.47 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | | |
| 91-நாள் | 9.39 | 8.89 | 8.52 | 8.24 | 7.85 | 7.63 | 7.62 | 7.58 |
| 182-நாள் | 9.67 | 9.09 | 8.63 | 8.49 | 7.94 | 7.70 | 7.75 | 7.73 |
| 364-நாள் | 10.40 | 9.81 | 8.88 | 8.70 | 8.21 | 8.22 | 8.41 | 8.41 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வராந்தம்) | 12.23 | 12.20 | 11.82 | 11.52 | 10.89 | 10.66 | 10.49 | 10.46 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.49 | 14.47 | 14.48 | 14.36 | 14.22 | 14.04 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் (அ) | 14.64 | 14.71 | 14.67 | 14.43 | 13.91 | 13.84 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.98 | 8.97 | 9.00 | 8.94 | 8.88 | 8.73 | 8.51 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.11 | 11.15 | 11.19 | 11.07 | 10.97 | 10.74 | 10.46 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.42 | 11.24 | 10.05 | 9.85 | 8.58 | 8.40 | - | - |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*